



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.







தஞ்சையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழியெங்கும் பொதுமக்கள், குறிப்பாக தாய்மார்கள் திரண்டு வந்து வரவேற்ற காட்சி!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2023) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், மனையேறிப்பட்டி ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாமிற்கு நேரில் சென்று, விண்ணப்பங்களை பதிவு செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், துரை.சந்திரசேகரன், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023 விழாவில், பாரம்பரிய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற்ற 3 விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கிடும் விதமாக, முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம், ரங்கசாமி சார்பாக அவர் மனைவி திருமதி வீரம்மாள் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இரண்டாம் பரிசு பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மு.சரவணன் அவர்களுக்கு 75,000 ரூபாய்க்கான காசோலையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மூர்த்தி அவர்களுக்கு 50,000 ரூபாய்க்கான காசோலையும் வழங்கி, வாழ்த்தினார். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு.பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆளுங்கட்சிக்குள்ளேயே இடைவெளி தெரிகிறது!

# எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேச அனுமதிக்க வேண்டும்!

### உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு – காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம்!

புதுடெல்லி, ஜுலை 29 -

நாடாளுமன்ற கூட்டத் தொடரினை அமைதியாக நடத்த ஒத்துழைக்குமாறு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு செவ்வாயன்று கடிதம் எழுதி யிருந்தார். அந்தக் கடிதத்துக்கு காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே புதனன்று பதில் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"ஒரே நாளில் எதிர்க்கட்சிகளை (இந்தியா கூட்டணி) பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடனும், தீவிரவாத குழுக்களுடனும் பிரதமர் ஒப்பிட்டு பேசுகிறார். அதே நாளில், ஒன்றிய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளிடமிருந்து சாதகமான நடவடிக்கைகளை எதிர்பார்ப்பதாக உருக்கமாக கடிதம் எழுதுகிறார். நீண்டகாலமாக ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் இடைவெளி இருப்பது தெரியும். இப்போது ஆளுங்கட்சிக்குள்ளேயே இடைவெளி ஏற்பட்டிருப்பது வெளிப்படத் தொடங்கியிருக்கிறது.



எதிர்க்கட்சிகளை திக்கற்றவர்கள் என்று பிரதமர் கூறியிருப்பது அபத்தமானது மட்டும் இல்லை, துரதிர்ஷ்டவசமானதும் கூட. பிரதமர் நாடாளுமன்ற அவைக்கு வந்து மணிப்பூர் குறித்து அறிக்கை அளிக்க வேண்டும் என நாங்கள் கேட்கிறோம். அப்படிச் செய்வது அவரின் மரியாதையை புண்படுத்தும் என்று பிரதமர் கருதுகிறார். நாட்டு மக்களிடம் எங்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வு உள்ளது. அதற்காக என்ன விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். நாடாளுமன்றத்தில் அரசின் அணுகுமுறை, உங்களின் கடிதத்துக்கு மாறாக தன்னிசையானதாக இருக்கிறது.

இது ஒன்றும் புதியது இல்லை. எதிர்க்கட்சிகள் இது போன்ற அணுகுமுறையை பல கூட்டத் தொடர்களில் பார்த்திருக்கின்றன. கூட்டத் தொடர் முழுவதும் உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவாதம் நடத்த வேண்டும் என்று தினந்தோறும் நோட்டீஸ் அளிக்கின்றனர். ஆனால் அரசு அதை நிராகரிக்கிறது. அவைத் தலைவரின் அனுமதிக்குப் பின்னர் உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் பேச எழும்போது, சபையின் தலைவர் அவரைத் தடுக்கிறார். ஆனாலும் அவையில் விவாதம் நடக்கும் என்ற நம்பிக்கையில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கூடுகின்றனர். நீண்ட காலமாக நாம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் வரலாற்றில் இடம்பெறும் என்று நாம் அறிவோம்.

வருங்கால சந்ததிகளுக்கு நாம் பொறுப்பானவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் உரிமைக்காக நாம் போராடினோம் என்று அவர்களிடம் கூற முடியும். நாடாளுமன்றம் அமைதியான முறையில் நடக்க வேண்டும் என்று ஆளும் தரப்பு விரும்பினால், அதற்கான எளிய வழி, அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேச அனுமதிப்பதே" என்று மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

## 'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!






முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.07.2023) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற வேளாண் சங்கமம் 2023 விழாவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே.பன்னீர் செல்வம், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2023) தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற பந்தல் ஆர்.சிவசுப்பிரமணியன் மகள் எஸ்.யாஷினி – ஆர்.கே.கோபால் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மலர்கொத்து வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.